அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் IV.] MARCH, 1904—ஹு௵ மார்ச்சு. [இலக்கம். 1.

பசுமாடுகளைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய சில குறிப்புகள்.

உழைத்து வேலைசெய்கிற குடியானவன் தான் எத்தனை பசுக்களுக்குத் தீனிபோட்டுக் காப்பாற்றக் கூடுமோ, அத்தனை பசுக்களைமாத்திரமே வைத்திருக்கலாமேதவிர அதிகமான பசுக்களை வைத்திருக்கலாகாது. பசு ஒன்றானாலும், வயிறு நிரம்ப நல்ல தீனிபோட்டு நல்ல கொட்டிலில் கட்டி நன்றாக வளர்த்தால், அப்படி வளர்க்கப்படாத இரண்டு பசுக்கள் எவ்வளவு பால் கொடுக்குமோ, அவ்வளவு பாலை இது ஒன்றே கொடுக்கும். பசுவை வைத்திருப்பவன் முக்கியமாக அதன் தேக சவுக்கியத்தைக் கவனிக்கவேண்டும். அப்படிப் பசுவைச் சவுக்கியமுள்ளதாக வைத்திருப்பதற்கு அவன் அதன்மேல் அதிகமான கருத்து வைக்கவேண்டும். ஒருவன் தன் பசுவின்மேல் எவ்வளவு கவனம் வைக்கிறானோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமான லாபத்தை அது அவனுக்குக் கொடுக்கும். தேக சவுக்கிய விஷயத்தில் வாயில்லா ஜந்துக்களை மனிதர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் நல்லதாகும்: நல்ல ஆகாரமும் வஸதியான வீடுமுள்ளவனாய்ச் சிறந்த தேகசவுக்கியம் பெற்றிருக்கிற மனிதன் மிகவும் அசாத்தியமான வேலைகளையெல்லாம் செய்யத் திறமையுள்ளவனா யிருப்பானன்றோ? நல்ல உணவும் நல்ல வீடுமில்லாமல்நோயாளியாயிருக்கிற மனிதன் அப்படிப்பட்ட வேலைகளைச் செய்ய வல்லவனாவானோ? வாயில்லா ஜந்துக்களும் அப்படியேயாம்.

பசுமாடுகளுக்கு நாம் அளிக்கும் உணவின் அளவுக்கும் குணத்திற்கும் ஏற்றபடிதானிருக்கும் அது நமக்குக் கொடுக்கிற பால். மேலும் பசு வஸிக்க நாம் ஏற்படுத்தும் இடத்தின் சவுக்கியத்திற்கேற்றபடியாகவும் பால் விசேஷமாகச் சுரக்கும். இது உண்மையானால், பசுமாடுகளைப் போஷிக்கும் விஷயத்தில் நாமெவ்வளவு செலவுசெய்தாலும் அவ்வளவும் நமக்கு நன்மையே யன்றோ? முக்கியமாக மழைக்காலத்தில் பசுவுக்கு நனையாத இடமும் நல்ல உணவும் தேடிக்கொடுக்கவேண்டும். பசுமாடுகளுடைய உடம்பு அழுக்கில்லாமல் சுத்தமாயிருக்கும்படி தேய்த்துக் குளிப்பாட்டவேண்டும்; பசு கட்டுமிடத்தில் தரை ஈரமில்லாமல் உலர்ந்திருக்கவேண்டும்; இரவில் பசு படுத்துக்கொள்ளத் தழையாவது வைக்கோலாவது கீழே போடவேண்டும். மாடுகட்டுமிடம் சுற்றுப்பக்கத்துத் தரையைப்பார்க்கிலும் அரையடியாவது உயர்ந்திருக்கவேண்டும்; அந்த விடம் மேடுபள்ளமில்லாமல் சமமாயிருக்கவேண்டும். பசுமாடு கட்டுமிடம் சமமாயிராமல் மேடுபள்ளமா யிருப்பதனாலேயே, அவ்விடத்தில் நிற்கும் பசுவுக்குக் காலில் நோவும் புண்ணு முண்டாவது வழக்கம். மேடுபள்ளமான தரையில் சரியாக நிற்க முடியாமல் பசு அடிக்கடி காலை மாற்றி மாற்றி நிற்கும்படியாகிறதாகையால், அதற்கு அதிகமான வருத்தமும் எரிச்சலு முண்டாகின்றன. பசுமாட்டுக்குத் தன் உடம்பை நக்குவது மிகவும் சவுக்கியமாயிருக்குமாகையால், அப்படி நக்கிக்கொள்வதற்கு ஒரு தடங்கலு முண்டாகாதபடி மாட்டைக் கட்டவேண்டும்.

மாடுகட்டு மிடத்தில் வெளியிலிருந்து நல்ல காற்றுவந்து உலாவும்படி யிருக்கவேண்டும், நல்ல வெளிச்சமு மிருக்கவேண்டும். வெளிச்சமும் காற்றும் மேலே யிருந்து வருவதைப்பார்க்கிலும் பக்கங்களிலிருந்து வருவது நல்லதாகையால், கீழண்டையும் தென்னண்டையும் சாளரங்கள் முக்கியமா யிருக்கவேண்டும்.

மழைக்காலத்திலும் பனிநாளிலும் குளிர் தாக்காத விடம் மாடுகளுக்குக் கிடைக்காவிட்டால், மாட்டின்மேல் கம்பளிபோட்டுப் போர்ப்பது நல்லது. கோடைநாளில் பிரதிதினம் 2, 3 மணி நேரமாவது வெளியே ஓட்டி மாடுகள் காலாறி வரும்படி செய்யவேண்டும். மழைக்காலத்தில் வெளியே போய் நனையாதபடி மாடுகளைக் கொட்டிலில் கட்டிவைப்பதே நலமானது.

பிரதிதினம் மாட்டின் உடம்பைத் தேய்த்துத் துடைப்பது மிகவும் அவசியமென்பதை அநேகர் தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்கள். நாள்தோறும் மாட்டைத் தேய்த்துக்கொண்டு வந்தால் அதன் மேல்தோல் அழுக்கற்றிருப்பதோடுகூட, அதற்கு நோயொன்றும் வராமல் அதிகமான சவுக்கியமுமுண்டாகிறது.

பசுமாடு எப்போதும் மனங் கலங்காமலிருக்கும்படி செய்துவரவேண்டும். பயப்படுகிற குணம் பசுமாட்டுக்கு அதிகமாகையால், ஒருபோதும் அதை யதிகமாக வெருட்டலாகாது. பசுமாட்டை அடிக்கவாவது குத்தவாவது உதைக்கவாவது கல்லெறியவாவது கடுஞ்சொற் சொல்லவாவது, ஒன்றும் கூடாது. இப்படிப்பட்ட காரியங்கள் செய்தால் அதற்கு அதிகமான கிலேசமுண்டாகிப் பால் சுரப்பது நின்றுபோம்; பாலின் உருசியும் குறைந்துபோம்.

நாட்டுப்புறத்திலே மாட்டுக்காரப் பையன்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டு போகும்போதும் வரும்போதும் அடிக்கடி அவைகளைத் துரத்தி யோடச் செய்வதுண்டு. அப்படிச் செய்வது மிகவும் பிசகு; அதனால் பசுமாட்டுக்கு அதிகமான சேதமுண்டாகும். குடியானவர்களுக்கு ஜீவகாருணியமே ஒரு நாளு மழியாத மூலதனமாம். அதுவே அவர்களுக்கு விசேஷமான லாபத்தைக் கொடுக்கும். கூடுமானால் எப்பொழுதும் ஒரே மனிதனே பால் கறப்பது நல்லது. அப்படிப் பால் கறப்பவன் சுபாவத்திலேயே ஜீவகாருணிய முள்ளவனாயிருப்பது மிகவும் விசேஷம். பால்கறப்பவன் அன்புள்ளவனாயிருந்தால், ஒருவேளை பால் கறக்கும்போது பசு சற்று முரட்டுத்தனம் பண்ணினாலும், அவன் அதை யடித்துச் சீறுமாறு பண்ணாமல் நல்லதனமாகவே சாந்தப்படுத்துவான்.

பால் கறப்பதற்கு முன்னே பசுவுக்குத் தீனி வைப்பது மிகவும் நல்லது; அப்படிச் செய்தால் பால்கறக்கும்பொழுது பசு அசையாமல் நிலையாக நிற்கும். பால் கறப்பவன் உடம்பில் அழுக்கில்லாமல் சுத்தம்செய்துகொண்டு பால் கறக்கவேண்டும். பால் கறக்கும்பொழுது அவ்விடத்தில் தும்பு தூசு அதிகமாகப் பறக்காமலிருக்கவேண்டும்; பசுவின் மடியை நன்றாய்க் கழுவிப் பால் கறக்கவேண்டும்; கறக்கும்பொழுது பால் ஆறி அதன் மணம் போய் விடாதபடி வாய்குவிந்த புனல் என்கிற கருவியின் வழியாகப் பெரிய பாத்திரத்தில் போய் விழும்படி கறப்பது உத்தமம்.

பசுமாட்டுக்கு ஆகாரம் கொடுக்கும் விஷயத்தில் அதிகஜாக்கிரதையாயிருக்கவேண்டும்: புல், பருத்திக்கொட்டை, கோதுமைத்தவிடு முதலானவைகளை உணவாய் அளித்தால் பசுக்களுக்கு விசேஷமாகப் பால் சுரக்கும். கெட்டுப்போன உணவுகளை ஒருபோதும் பசுமாட்டுக்குப் போடலாகாது. பால் வற்றிப்போகும் உணவுகளையாவது அசௌக்கியமுண்டாக்குகிற அழுக்கடைந்த உணவுகளையாவது பசுக்களுக்குக் கொடுப்பவர்களுக்கு 50 ஷில்லிங்குக்குக் குறையாத அபராதமும், ஒரு வருஷம் கடுங்காவலும் தண்டனை விதிப்பது **நியூயார்க்** நகரத்தில் வழக்கமாயிருக்கிறது.

பசுமாடுகளெல்லாவற்றிற்கும் இதுதான் ஏற்ற உணவென்று உறுதியாகச் சொல்லமுடியாது. ஒவ்வொரு பசுவின் குணாகுணங்களையும் நன்றாய்த் தெரிந்து அதற்கு ஏற்ற உணவு இன்னதென்று நன்றாய் ஆராய்ந்து அறிந்து உபயோகிக்கவேண்டும். பசுமாட்டுக்கு உப்பு அதிகமான ஆரோக்கியத்தைக் கொடுக்குமென்கிறார்கள். பசுமாடுகள் எப்பொழுதும் நல்ல தண்ணீரையே குடிக்கும்படி செய்யவேண்டும், அழுக்குத் தண்ணீர் ஒருபோதும் ஆகாது. சீதகாலங்களில் வெந்நீரையே குடிக்கும்படி செய்தால், பாலும் மிகுதியாகச் சுரக்குமென்று தேக தத்துவசாஸ்திர முணர்ந்த பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அழுக்குத் தண்ணீரைக் குடிப்பதினால் பசுமாட்டின் தேக சவுக்கியம் குறைகிறதென்றும், அதனால் பசுவினது பாலின் குணம் கெட்டுப்போகிறதென்றும் சொல்லுகிறார்கள். அழுக்குத்தண்ணீர் குடித்த பசுவின்பாலை யெடுத்துப் பூதக்கண்ணாடியைக்கொண்டு பரிசோதித்துப் பார்த்து, அந்தப் பாலில் நிரம்பப் பூச்சிகள் காணப்படுகின்றனவென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

பசுமாட்டுக்குத் தீனிபோடுவதும், பால் கறப்பதும், தேய்த்துக் குளிப்பாட்டுவதும் பிரதிதினம் வேளை தப்பி வேளையில் செய்யாமல் நாள்தோறும் நியதமாய் ஒரே வேளையில் செய்துவருவது நலம். உணவு சுத்தமாயும் ஆரோக்கியமாயு மிருக்கவேண்டும். பசுமாட்டுக்குப் போடும் புல் வைக்கோல் முதலான உணவுகளை எருக்களத்தின் பக்கத்தில் சேர்த்துவைக்காமல் தனியே நல்ல விடத்தில் வைக்கவேண்டும். எருக்களத்தின் பக்கத்திலிருந்தால், எருவிலிருந்து கிளம்புகிற ஆவியுடன் அநேகம் நோய்க்கிடமான கெட்ட பொருள்களெழுந்து பக்கத்திலுள்ள வைக்கோலில் படிந்து, அதைத்

தின்னும் பிராணிக்கு அசவுக்கியமுண்டாக்கிவிடும். பசுமாட்டுக்குப் போடும் தீனியோடு வேறு குப்பை கூளமொன்றும் கலக்கும்படி செய்யலாகாது, கலந்தால் பசுக்கள் அதைத் தின்னுமல் கழித்துவிடும். மாட்டுச்சாணி முதலான எருவை மாடுகட்டு மிடத்திற்குச் சிறிதுதூர மப்பால் கொட்டிவைக்கும்படி செய்வது நலம்.

சினையான பசுக்களை ஈனுவதற்கு மூன்றுமாதம் முன்தொடங்கி வெகு கருத்தாகக் காப்பாற்றி வரவேண்டும்; அதற்குப் போடும் உணவு விஷயத்திலும் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். கன்று போடும் காலத்தில் பசுவை முக்கியமாக நன்ருய்ப் பாதுகாக்கவேண்டும்; அந்தச் சமயத்தில் அதற்கு ஆரோக்கியமான நல்லுணவும் வெந்நீரும் கொடுப்பது நல்லது. ஈன்றபிறகு கன்றுக்குட்டியையும் அதிக ஜாக்கிரதையாய்க் காப்பாற்றவேண்டும். பிறந்த இரண்டொரு மாதம்வரையில் கன்றுக்குட்டிக்குத் தாய்ப்பாலே போதுமான ஆகாரம். அதற்குப் பிறகு கஞ்சிமாவு முதலானவற்றையும் உணவாய் ஊட்டலாம். கன்றுக்குட்டிகளை நல்ல வயது வருமளவும் பத்திரமாகப் போஷித்தால், பிறகு அது உடையவனுக்கு ஒரு சிறந்த தனமாகும்.

சில குடியானவர்கள் பசு சினையாயிருக்கும்பொழுதும் அதற்குத் தவிடு முதலான உணவுகளைக் கொடுத்துக் கன்றுபோடுமளவும் பால் கறந்துகொள்ளப் பாடுபடுகிருர்கள். இப்படி மாட்டின் தன்மைக்கு விரோதமாக வருத்திப் பால்கொள்வதனுல் அப்பசு நாளளவிலே பலவீனப்பட்டு நோய்பிடித்து ஒன்றுக்கும் உபயோகமற்றதாகிவிடும். இது பெரிய பாவமாம். சிலர் இக்காலத்தில் கன்றுக்குப் பால் விடாமல் கன்றை யிறக்கும்படி செய்து பிறகு தோல் கன்று காட்டிப் பால்கறந்து விற்று வயிறு வளர்க்கிருர்கள். அவர்களுக்கு என்னகதி கிடைக்குமோ! அப்படிக் கன்றில்லாத பசுவின்பாலை வாங்கிக் குடிப்பவர்களும்அந்தப் பாவத்திற்குப் பங்காளிகளேயாம். இப்படிப்பட்ட அயோக்கியமான காரியங்க ளொன்றும் செய்யாமல் பசுமாட்டைக் கருத்தாகக் காப்பாற்றினுல், குடியானவர்கள் மிகுதியான பாக்கியம் பெறுவார்களென்பது நிச்சயம்.

பக்ஷி இறகுகளை யலங்காரமாகத் தரிக்கும் ஸ்திரீகளுக்கு ஒரு வேண்டுகோள்.

ஐரோப்பிய ஸ்திரீகள் ஏறக்குறைய யாவரும் அலங்காரமாகத் தங்கள் தொப்பிகளில் பக்ஷி இறகுகளைத் தரிப்பது நெடுநாளாக வழக்கமாயிருக்கிறதென்பது பலபேருக்குத் தெரிந்திருக்கலாம். அப்படித் தாங்கள் முடியில் தரிக்கப் பக்ஷிகளைக் கொன்றே இறகைப் பெறவேண்டுமென்பது அவர்களுக்குத் தெரிந்தால், அநேகர் அந்த அலங்காரத்தில் ஆசையை யொழித்துவிடுவார்களென்பது நிச்சயமென்று ஒருவர் உறுதியாகச் சொல்லுகிருர். அப்பெருமாட்டிகள் இதைத் தெரிந்துகொள்ளாமையாலேயே பக்ஷி இறகால் தம்முடியை அலங்கரித்துக்கொள்ள ஆசைப்படுகிருர்க ளாகையால், அவர்களுக்கு இதனுண்மையைத் தெரிவிக்கும்படி இங்கே கொஞ்சம் குறிப்பாகக் காட்டுகிறோம்.

பெண்கள் தலைக்குத் தொப்பி தைப்பவர்களுக்கு இறகு வேண்டுவதற்காகப் பிரதி வருஷம் அளவற்ற பக்ஷிகள் கொல்லப்படுகின்றன. அப்பறவைகளைக் கொல்வது வெகுவாக அவை முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் காலத்திலேதான். அக்காலத்தில் தாய்ப்பக்ஷிகளைக் கொலைசெய்துவிட்டால், குஞ்சுகள் கூட்டுக்குள்ளே உணவில்லாமல், ஐயோ! பசியால் வருந்திப் பிராணனை விடவேண்டியதாகிறதே!

அமெரிக்கா தேசத்துப் பெண்களுடைய அலங்காரத்திற்கு வேண்டிய இறகுகளுக்குமாத்திரமே பத்து லக்ஷம் பக்ஷிகளைப் பிரதி வருஷம் கொல்ல வேண்டி யிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிருர்களென்று, அத்தேசத்து ஜீவகாருணிய சங்கத்தில் சேர்ந்த ஒருவர் பிரசுரஞ் செய்திருக்கிருர். அதற்காக இன்ன பக்ஷியைக் கொல்லுகிறதென்கிற நியமமில்லை; எது அவர்கள் கண்ணுக்கு நல்லதாகக் காணப்படுகிறதோ, அதை யடித்துவிடுகிருர்கள். அதைப்பற்றி ஒரு சபையார் சொல்வதாவது:—

'பறவைக் கொலை இங்கே அதிகமாக நடந்தேறி வருகிறது. **கேப்காட்** என்னு மிடத்தில் ஒரே பருவத்தில் வெளித்தேசங்களுக்கு அனுப்ப 40,000 பறவைகள் கொல்லப்படுகின்றன; மற்றோரிடத்தில் ஒரே மாதத்தில் பத்துலக்ஷம் பக்ஷிகள் கொலை செய்யப்படுகின்றன' என்கிருர். கலியாண காலங்களில் பெண்கள் அலங்காரஞ்செய்துகொள்வதற்காகவே இறகுக்காக முக்கியமா யிப்பறவைகள் கூட்டிலுள்ள குஞ்சுகளுக்கு உணவு ஊட்டப்போகிற தருணத்தில் குஞ்சுகளின் கண்ணெதிரிலே பரிதாபமாய் அடித்துத் தள்ளப்படுகின்றன; ஐயோ! உணவு தேடிக்கொண்டுவந்து ஊட்டும் தாயை யிழந்து பட்டினியால் வருந்தும் அந்தச் சிறு பறவைகளின் பரிதாபத்தை நினைத்தால், எப்படிப்பட்ட கல்லான நெஞ்சும் கரைந்து, அப்படிப்பட்ட கொடுமைசெய்ததைப்பற்றி யாவரும் தம்மைத் தாமே நிந்தித்துக்கொள்ள நேரிடுமல்லவா? ஐயோ! தங்களுக்காக இப்படி அநேகமாயிரம் எளிய சிறு பறவைகள் தாயை யிழந்து அல்லாடித் தவிப்பது தெரிந்தால், தாங்கள் அப்படி யிறந்த பக்ஷியின் இறகைத் தலையில் தரித்துக் கலியாணஞ் செய்துகொண்டு கணவனோடு கூடிக் களித்திருக்க எந்தப் பெருமாட்டிதான் பிரியப்படுவாள்!

பக்ஷி யிறகுகளைப் பெறுவதற்காக இன்னொரு கொடுமை செய்யப்படுகின்றதாம். கழுகு, இராஜாளி முதலியவைகளைப்போன்ற உபயோகமான பறவைகளை வலைபோட்டுப் பிடிக்கச்சாமர்த்தியமான உபாயமொன்று கண்டுபிடித்திருக்கிறார்களாம். அதன்படியே அந்தப் பக்ஷிகளை வலையில் அகப்பட்டுக் கொள்ளும்படி செய்து அவற்றின் இறகுகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு, பிறகு பின்னும் அவற்றிற்கு இறகு முளைக்கட்டுமென்று வலையை யெடுத்து அவற்றை மறுபடியும் பறந்துபோகும்படி செய்கிறார்கள். ஐயோ பாவம்! இறகுகள்போன பிறகு அவை எப்படி பறந்துபோகமாட்டும்! அவை பறக்க முயன்று வருத்தப்படுவதைப் பார்க்க மிகப் பரிதாபமாயிருக்கும். பெண்களின் அலங்காரத்திற்கு இந்த இறகுகளும் போதாமல் புறா, பருந்து, வல்லூறு முதலான மற்றும் பல உபயோகமான பக்ஷிகளின் இறகுகளையும் பிடுங்கிவிடுகிறார்களாம்.

இந்தப் பறவைகள் தோட்டிகள்போல எங்கும் அழுக்கில்லாமல் நாடு நகரங்களைச் சுத்திசெய்வதனாலும், கொடிய புல் பூண்டுகளின் விதைகளையும் பயிருக்குக் கேடுசெய்கிற பல பூச்சிகளையும் தின்றுவிடுவதனாலும், மனிதருக்கு மிகவு முபயோகமானவைகளென்று முன் ஸஞ்சிகைகளில் சொல்லியிருக்கிறோமே. யுனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் நாட்டில் பிரதி வருஷம் பூச்சியினால் கோடிக்கணக்கான ரூபாய் விலையுள்ள தானியங்களைக் கொடுக்கும் பயிர்கள் அழிக்கப்படுகின்றனவென்று சொல்லுகிறார்கள். அந்தப் பூச்சிகளை யழிக்காமல் அப்படியே வளரவிட்டால் உலகத்தில் பயிரென்பதே போய்விடுமல்லவா?

இப்பக்ஷிகள் நாடுகளைச் சுத்தப்படுத்தி ஆரோக்கியத்தை யுண்டாக்குகிற காரணத்தால், சில தேசத்தில் இவற்றை எவரும் அடித்துக் கொல்லக்கூடாதென்று சட்ட மேற்படுத்தி விசேஷமாக விருத்தியாகும்படி செய்வதுமாத்திரமே யன்றி அவற்றைப் பழக்கியும் வளர்க்கிறார்கள்.

இவ்வுலகத்தில் எவ்வளவு பண்டங்கள் பிரதிதினம் அழுகுகின்றன, எவ்வளவு பிராணிகள் இறந்து போகின்றன; இந்தப் பற்பல விதமான பறவைகள் அவற்றைத் தின்று சுத்திசெய்யாவிட்டால் இவ்வுலகம் நெடுநாளைக்கு முன்னமே துர்நாற்றம் பரவி மனிதர் வசிப்பதற்கு உபயோகமற்றதாகி விட்டிருக்கு மன்றோ? பயிருக்கு அழிவுசெய்யும் பூச்சிகளை இந்தப் பக்ஷிகள் கொல்வதனால் வருஷந்தோறும் அமெரிக்காவில் ஐக்கியமாகாணமொன்றிலே மாத்திரம் 50,00,000 பவுன் விலைமதிப்புள்ள தானியங்கள் காப்பாற்றப்படுகின்றனவென்று கணக்கிட்டிருக்கிறார்கள். மனிதர்களுக்கு மற்றும் பல விதமாகத் தொந்தரவுசெய்கிற ஈ, கொசுகு முதலான எவ்வளவோ பிராணிகளை இந்தப் பறவைகள் அழித்து நன்மைசெய்கின்றனவே!

இப்படிப்பட்ட உபயோகமான பக்ஷிகளைக்கொன்று அவற்றின் இறகுகளையோ ஸ்திரீகள் தம் முடியில் தரித்துக்கொள்வது? அப்படிப்பட்ட பெருமாட்டிகள் தம்மக்களுக்கு ஜீவஹிம்ஸை கூடாதென்பதை எப்படி கற்பிக்கத் துணிவார்கள்? ஆகையால் முதலில் அந்தப் பெண்பிள்ளைகளுடைய முடியிலுள்ள இறகுகளைப் பிடுங்கி நெருப்பில் போட்டு எரித்து, பக்ஷி இறகு தம்முடிக்கு அலங்காரமென்கிற எண்ணத்தை அவர்களுடைய மனத்தினின்று மொழியச் செய்தால், பக்ஷிகளைக் கொல்வது வெகுவா யொழிந்துபோம்; முக்கியமாக மாமிச போஜனத்தை விலக்க முயலவேண்டும்; விளையாட்டுக்குப் பறவைகளை வேட்டையாடுகிற கெட்ட வழக்கமும் கூடாதென்று ஸ்திரீகள் தம் மக்களுக்குப் போதிக்கவேண்டும்; தம் வீட்டின் அருகே பக்ஷிகள் வந்து கூடு கட்டி முட்டையிடுவதற்கு வேண்டிய இடங்கள் அமைத்து வைக்கவேண்டும். இத்தனைக்கும் முதற்காரணம் ஜீவகாருணியமே யாகையால், அது வேரூன்றுவதற்கு வேண்டிய வழிகளைத் தேட ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும்.

ஜீவகாருணியத்தைச் சிறு பருவத்திலே போதிக்கவேண்டும்.

ஆலோசனையில்லாமலும் இரக்கமில்லாமலும் காரியஞ் செய்கிற சுபாவம் மனிதர்களுக்கு முதலில் வாயில்லாத எளிய ஜந்துக்களிடத்திலேயே பழக்கமாகத் தொடங்கி, வரவர அந்தக் குணம் மிகக் கொடிய துர்க்குணமாக மாறுகின்றது. பிறர் தம்மை இம்சிக்கும்போது காத்துக்கொள்ளும் திறமை எளிய ஜந்துக்களுக்கு இல்லையாகையால், இம்சிக்கும் கெட்ட சுபாவத்தை மனிதர் அவற்றினிடம்செலுத்த அவகாசமுண்டாகிறது. இது மனிதர்களுக்கு மிகச் சிறு வயதிலேயே பழக்கமாகிவிடுகிறது. ஒன்றும் அறியாத சிறு குழந்தை தனக்கு ஒரு விளையாட்டாகச் சிறு பூச்சிகளைப் பிடித்து நசுக்க ஆரம்பிக்கிறது; பூனைக்குட்டிகளைப் பிடித்துப் பலவிதமாக இம்சிக்கிறது. குழந்தைக்கு ஒன்றும் தெரியாதென்கிற காரணத்தினாலேயே எளிய பிராணிகள் இப்படி இம்சையை அனுபவிக்கலாகுமா? அவற்றை இம்சித்தால் நம்மைப்போலவே அவைகளுக்கும் நோவு உண்டாகு மென்பதையும், நமக்கு இருக்கிற சுவாதந்திரியம் அவற்றிற்கு முண்டென்பதையும் பிள்ளைகளுக்குச் சிறு பிராயத்திலேயே பழக்கிவிட்டால், அவன் பெரியவனாகும்போது சுயநயத்தையே பாராட்டுகிற அற்ப மனிதனாகாமல், ஜீவகாருணியமும் தயாள குணமுமுள்ள பெரிய மனிதனாவான்.

இப்படிச் சிறுபிராயத்தில் ஜீவகாருணியத்தைப் பழக்காமை தாய் தந்தையருடைய தோஷமே

யாகையால், புத்திதெரிகிற நாள்வரையில் பிள்ளைகள் செய்யும் பாவம் பெற்றோரையே சேருமென்று இந்து தரும சாஸ்திரம் முறையிடுகிறது.

சிறு பிள்ளைகளைப் போஷிப்பதற்கு ஏற்பட்டவர்கள் அக்குழந்தைகளை அன்புடன் ஆதரிப்பதைவிட்டு, அவர்களைக் கொடுமையாக நடத்தப் பலவிடங்களிலே பார்த்திருக்கிறோமல்லவா? இதற்குக் காரணம் அந்தப் பெரியவர்களும் அப்படிப் பழக்கப்பட்டதேயாம். தகப்பன் சிறுவனாயிருக்கையில், பூனை முதலான எளிய ஜந்துக்களைப் பிடித்து இம்சிக்கிறான்; பிறகு சற்றுப் பெரியவனானால், நாய் முதலானவைகளை யடித்துத் தொந்தரை பண்ணுகிறான்; இன்னும் சற்றுப் பெரியவனானால் தன்னிலும் சிறிய பிள்ளைகளை யடித்து இம்சிக்கிறான்; கலியாணமாகிவிட்டால், பெண்டாட்டியுடன் எப்போதும் போராடிக் கொடுமை செய்கிறான்; தகப்பனாகிவிட்டால். தன் கொடுந்தன்மையைப் பிள்ளைகளிடம் காட்டுகிறான். தன் கொடுமையை யடக்க அவன் ஒருபோதும் கற்றுக்கொள்ளுவதில்லை; எளியவர்களைக் காப்பாற்றுவது இப்படிப்பட்டதென்பது அவனுக்குத் தெரியவே தெரியாது. பிறருக்கு வந்த நோவு தனக்கு வந்த நோவுபோலத்தானேயிருக்கு மென்பதையும் அவன் ஒருபோதும் நினைத்தவனல்லன். இனி அவனைப் பற்றி நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

சிறு குழந்தையின் சிறு புத்தி மிகவும் நுட்பமானது; தன்னைப் பெரியோர் எப்படி நடத்துகிறார்களோ, அப்படியே குழந்தையும் செய்யத் தொடங்குகின்றது. தாய் தந்தையர் கோபத்தோடு தன்னை யடித்தால் தானும் அப்படியே கோபித்து மற்றவர்களை யடிக்கவேண்டுமென்று குழந்தை கற்றுக்கொள்ளுகிறது. அப்படிப் பழக்கப்பட்ட பிள்ளை கோபமும் கொடுந் தன்மையு முடையதாக வளருவது ஒரு ஆச்சரியமல்லவே! அதனால் அந்தப் பிள்ளையும் தந்தைபோலவே பொல்லாதபிள்ளை யாகிவிடுகிறது.

தாயார் முதலில் தான் மனப்பூர்வமாகச் செய்யாமலே கெட்ட குணங்களெல்லாவற்றையும் கொடுந்தன்மையையும் தன் குழந்தைக்குக் கற்பித்துக் கொடுத்துவிடுகிறாள். எப்படியென்றால், குழந்தை ஒரு மரக்குதிரைமேல் உட்கார்ந்திருந்தால், குழந்தையின் சிறு கையில் ஒரு சாட்டையைக் கொடுத்து, 'இதனால் இக்குதிரையை அடித்து ஒட்டு' என்று சொல்லுகிறாள். ஒரு பையன் பூனை நாய் முதலியவற்றைப் பிடித்து இழுக்கும் பொழுது, 'இழுத்தால் அது உன்னைக் கடிக்கும்' என்று சொல்லுகிறாளேதவிர, 'இப்படி யிழுத்தால், ஐயோ பாவம்! இதற்கு நோகுமே' என்று சொல்லுகிறவர் ஒருவருமில்லை. குழந்தை கதவிலாயினும் சுவரிலாயினும் இடித்துக்கொண்டு அழுதால், 'கெட்ட கதவு! கெட்ட சுவர்! இதை யடி' என்று சொல்லிக் கதவையும் சுவரையும் அடிக்கவே கற்பிக்கிறாள். இதனால் அவள் கற்பிப்பதென்ன? ஏதாவது துன்பம் நேரிட்டபோது, அதைப்பொறுத்துக்கொள்ளும் நற்குணத்தைப்போதிக்காமல், குற்றஞ் செய்தவனாகட்டும், செய்யாதவனாகட்டும், அவனிடம் பகை தீர்த்துக்கொள்ளும் கெட்ட குணத்தையே போதித்துவிடுகிறாள். இவ்விதமான பழக்கத்தினால் விளைவதென்னவென்று சற்று யோசித்துப் பார்ப்போம். பிறருக்கு உண்டாகும் துன்ப மிப்படிப்பட்டதென்று கற்பிக்கப்படாமையால், ஜீவகாருணியமென்பது இப்படிப்பட்டதென்றே தெரியாமல், சிறுபிராயத்தில் வாயில்லாத ஜந்துக்களை இம்சித்த பையன் பெரியவனானபோது, மனிதர்களை இம்சிக்கவும் பழி தீர்த்துக்கொள்ளவும் தலைப்பட்டு மிகக் கொடியனாய்த் தனது சுகவாழ்க்கையை யிழந்துபோகிறான்.

ஆகையால் சிறுவர்கள் கையில் சாட்டை, கத்தி, குண்டு, வில் முதலான ஆயுதங்களை யொருபோதும் கொடுக்கலாகாது; மேலும், வீணைச் சண்டை தொடுப்பதும், ஒருவர்க்குக் கொடுமை செய்வதும் பாவமென்று போதியுங்கள். பக்ஷிகளைப் பார்த்துச் சந்தோஷப்படும்படி கற்பியுங்கள், அவற்றிற்கு உணவு ஊட்டி வளர்க்கப் பழக்குங்கள், அவற்றை யடிக்க ஒருபோதும் கற்பிக்கவேண்டாம்; நம்மை யொருவர் துன்புறுத்தினால் நமக்கெப்படியிருக்குமோ, அப்படியேதான் தங்களுடைய அருமையான எளிய பிராணிகளுக்கு மிருக்குமென்பதைப் பிள்ளைகளுக்குச் சிறுவயதிலேயே பழக்கினால் தான், பெரியவரானபோது அவர்கள் சுயநயத்தைப் பெரியதாகப் பாராட்டாமல் பரோபகார சிந்தை யுடையவர்களாவார்கள். இப்படிப்பட்ட பழக்கத்தைச் சிறுவர்களுக்குச் செய்விப்பது இக்காலத்தில் மிகவும் அருமையாயிருக்கின்றது.

பிராணிகளுக்குத் தெரிந்த பாஷை.

மனிதர்கள் சாதாரணமாகப் பசு பக்ஷி மிருகம் முதலியவைகளைச் சொல்லும்பொழுது 'வாயில்லா ஜந்துக்கள்' என்றே அவற்றைச் சொல்லுகிறார்கள். ஏனென்றால், அவை நம்மைப்போலப் பேசுந்திறமை யில்லாதவையென்றும், நாம் சொல்வதைத் தெரிந்துகொள்வதில்லையென்றும் அவர்கள் நினைத்து அப்படிச் சொல்லுகிறார்கள். அது சரியல்ல; விசாரித்துப் பார்த்தால் அவர்கள் நினைத்தது முற்றும் பிசகென்று நன்றாயேற்படும். மிருகங்களையும் பக்ஷிகளையும்பற்றி நுட்பமாகப் பரிசோதனை செய்து பார்த்தால், ஒவ்வொரு ஜாதி பிராணிக்கும் தனித்தனி ஒன்றுக்கொன்று தம் கருத்தைத் தெரிவித்துக்கொள்ள ஒவ்வொரு பாஷை யிருக்கிறதென்றும், அந்தப் பாஷையை மற்றவையும் எளிதாகத் தெரிந்துகொள்ளுகின்றன வென்றும் தெளிவாய் விளங்குகிறது. அவை ஒன்றுக்கொன்று பேசிக்கொள்வதையும், பேசிச் சங்கதியை யறிந்துகொள்வதையும் நுட்பமாகப் பார்ப்போமானால், வெகு சாதுரியமாயிருக்கும். இதற்குச் சில திருஷ்டாந்தங்கள் சொல்லுகிறோம் கேளுங்கள்.

ஆணும் பெண்ணுமான இரண்டு பறவைகள் ஒன்ருய்க் கூடி, ஆணும் பெண்ணுமான இரண்டு மனிதர்கள் கூடிக் களித்துப் பேசுவதுபோல், வெகு சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பதை நாம் பலதரம் பார்த்திருக்கிருே மல்லவா? அதன்பிறகு அவை செய்யும் காரியங்களைப் பார்த்தால், அப்பொழுது அவை பேசின சங்கதி இன்னதென்று நன்ருய் விளங்கும். அவை அப்படிப் பேசி முடிந்தவுடனே கூடுகட்டுவதற்கு நல்லதாய் ஒரு இடம் தேடி அங்கே இரண்டுமாய்க் கூடிக் கூடுகட்ட ஆரம்பிக்கின்றன. கூடுகட்டி முட்டையிட்டபின் குஞ்சுகளைக் காப்பாற்றும்பொருட்டு அவை பேசிக்கொள்வதைக் கருத்தாய்க் கேட்டவர்கள் அப்பக்ஷிகளை வாயில்லா ஜந்துவென்று ஒருபோதும் சொல்லத் துணியார்கள்.

தாய்க்கோழி தன் குஞ்சுகளோடு பேசுவதைக் கேட்டிருக்கிறீர்களா? தாய் சாப்பிடக் கூப்பிடுவதைக் கேட்ட பிள்ளைகள் உடனே தாயினிடம் ஓடுவதுபோல, தாய்க்கோழிச் சொன்னதைக் கேட்டவுடனே கோழிக்குஞ்சுகள் ஏதோ அபாயமிருக்கிறதென்று அறிந்து அப்போதே தாய்ப்பறவையினிடம் போய்ச் சேர்ந்துவிடுகின்றன.

குதிரையும் குதிரைக்குட்டியும் பேசிக்கொள்வதைப் பார்த்திருப்பீர்களாளுல், அவைகளுக்குப் பேசப் பாஷையுண்டென்பதை உடனே ஒப்புக்கொள்வீர்கள். இப்படியே பசுவும் கன்றும் ஒன்றுக்கொன்று பேசித் தம் கருத்தைத் தெரிவித்துக்கொண்டு சந்தோஷப்படுவதைப் பலரும் பார்த்திருக்கலாம்.

(இன்னும் வரும்.)

அணில் பிள்ளை கதை.

"அதோ அந்தப் புலத்திலிருக்கிற வாதுமைச் செடியை யார் உண்டாக்கினது தெரியுமோ? நானே அதை உண்டாக்கினேன். நான் ஒரு அற்பமான அணில் பிள்ளையாயிருந்தாலும், இந்த வாதுமை மரம் என்னுலேதான் உண்டாயிற்று.

ஆனுல், வாஸ்தவத்தில் முதலிலே நான் இங்கே செடி வைக்கவேண்டுமென்று நினைக்கவில்லை; எனக்குக் கிடைத்த ஒரு வாதுமைக் கொட்டையைச் சற்றுப் பொறுத்துப் பசியெடுத்தபோது தின்னலாமென்று இங்கே நிலத்தில் பத்திரமாகப் புதைத்து வைத்தேன். அப்புறம் நான் அதை யெடுத்துத் தின்ன மறந்துபோனேன். இரண்டொரு நாளைக்குப் பிறகு நான் கொட்டையை வைத்த விடத்திலே போய்ப் பார்க்கையில், அந்தக் கொட்டையினின்றும் சிறிய முளை யொன்று கிளம்பியிருந்தது.

நான் உங்களுடைய பாக்குப் பழங்களைத் திருடுகிறேனென்று நீங்கள் என்மேல் குற்றஞ்சாட்டுவீர்களோ என்னவோ, பாக்குப் பழங்களைப் பறித்துப்போட்டுப் பாக்குமரங்களும் முளைக்கும்படி நான் செய்வதுண்டு; அதற்காக நீங்கள் நன்றி பாராட்டவேண்டுமென்ருே?

ஒரு பெரிய ஆலமரத்தின் நுனியில் நான் எனக்கு அழகான வீடு ஒன்று கட்டிக்கொண்டிருக்கிறேன். சிறுபிள்ளைகளுடைய கண்ணுக்குத் தோன்ருதபடி அதை நான் நன்ருக மறைத்துக் கட்டியிருக்கிறேன்; நாங்கள் வீடு கட்டிக்கொள்ளும்பொழுது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயமிதுவேயாம்.

இந்தப் புலத்தில் எனக்குக் கிடைத்த மெல்லிய கொடிகள், உலர்ந்த புல், வைக்கோல் முதலானவைகளால் நான் எனக்கு வீட்டைக் கட்டிக்கொண்டேன். இந்த ஊராரெல்லாரும் என்னிடத்தில் அதிகமான அன்புள்ளவர்களாயிருப்பதனுல், இந்த ஊருக்குச் சமீபத்திலேயே நான் எனக்குக் கூடு கட்டினேன். இவ்விடத்திலுள்ள பிள்ளைகள் எனக்கு உணவாகக் கொட்டைகளும் பழங்களும் கொண்டுவந்து கொடுக்கிருர்கள்.

நான் இதுவரையில் அநேகநாள் சவுக்கியமாகவே வசித்துவந்தேன்; ஆனுலும் அதனேடு அநேக நாள் துக்கமும் அனுபவிக்கும்படியாக நேரிட்டது. அதில் நான் என்னுடைய இரண்டு சிறு குழந்தைகளை யிழந்த காலமே எனக்கு அதிக ஆபத்தான காலமாயிருந்தது.

எனக்குக் கண்ணன் என்று அழகான குழந்தையொன்று இருந்தது. அப்படிப்பட்ட சாமர்த்தியமுள்ள பிள்ளையை நான் பார்த்ததேயில்லை; புதிதான பொருள்களை அதிசயமாகப் பார்க்கவும், பல கேள்விகள் கேட்கவும் அதற்கு விருப்ப மதிகம்; அது இன்னும் கொஞ்சம் அதிகமான ஜாக்கிரதையோடு மாத்திரம் இருந்திருந்தால், இவைகளெல்லாம் மிகவும் விசேஷமாகக் கொண்டாடத் தக்கவைகளாகவேயிருக்கும். ஒருநாள் வெளியே போயிருந்தபொழுது என் கண்ணன் இந்த மரத்தின்கீழ் ஒரு பெட்டியைப் பார்த்து, அதிலென்ன இருக்கிறதோ பார்க்கவேண்டுமென்று மரத்தைவிட்டுக் கீழே இறங்கிப்போயிற்று. அதனுல் ஸம்பவித்தது இன்னதென்று உங்களுக்கே தெரியவரலாம்: என் கண்ணன் வலையில் அகப்பட்டுக்கொண்டது. அங்கே அந்த வலையைப் போட்டிருந்த பையன், உடனே வந்து கண்ணனைப் பிடித்து வீட்டிற்குக் கொண்டு போய் ஒரு கூட்டில் அடைத்துவிட்டான். அந்தப் பையன் நல்ல பிள்ளைதான்; அதிகமான அன்புடனே தின்பதற்குப் பழங்களும் கொட்டைகளும் கொடுத்து என் குழந்தையை வளர்த்துவந்தான். ஆனுலும், அப்படியிருப்பது கண்ணனுக்குச் சுகமாகத் தோற்றவில்லை; பசுமையான விருக்ஷங்களில் ஏறித் திரியவும், புலங்களில் போய்த் துள்ளி விளையாடவுமே கண்ணன் அதிகமான ஆசையுடையதாயிருந்தது.

இப்படியாக என் கண்ணன் பிடிக்கப்பட்டுப் போகவே, பலநாள்வரையில் அந்தத்துக்கம் ஆருமல் நான் மிகவும் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆனுலும், குச்சுவால் என்கிற எனது சிறிய குழந்தையின் முகத்தைப்பார்த்து என் சோகத்தைத் தணிக்க ஒருவாறு முயன்றேன். அப்படியிருக்க, அந்த

அருமையான இளம் பிள்ளையையும் இழக்கும்படியாக நேரிட்டதென்றால், அதைவிடப் பெருந்துக்கம் வேறென்னவேண்டும்?

குச்சுவால் குட்டி ஒருநாள் ஒரு மரத்தில் விநோதமாய் மேலும் கீழும் ஓடியும், ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவியும் விளையாடிக்கொண்டிருக்கையில், சில பிள்ளைகள் அதைக் கண்டார்கள். கண்டவுடனே அந்தப் பிள்ளைகள் அதன்மேல் கல்லை யெடுத்துப்போட்டு விளையாடத் தொடங்கினார்கள். பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டமல்லவா? பிள்ளைகள் கல்லை யெடுத் தெறிவது கண்டு, ஐயோ! என் குச்சுவால் மரத்தின்மேல் அங்குமிங்கும் ஓடி யொளிக்கப் பார்த்தது. அது எப்படி யோடியும் கடைசியில் பிள்ளைகளெறிந்த கற்களில் ஒன்று அதன்மேல் தாக்கியது. பிறகு அது ஒரு நிமிஷநேரம் அங்கேயே கிளையின்மேல் நடுங்கிக்கொண்டிருந்தது; அதைப் பார்த்து நான் அதன்மேல் காயம் நன்றாய்ப் படவில்லையென்று சந்தோஷமாயிருந்தேன். ஐயோ! உடனே மற்றொரு கல் வந்து விழுந்து நல்ல அடிபட்டுக் குச்சுவால் கீழே வீழ்ந்துவிட்டது.

என் அருமைக் குழந்தை கீழே வீழ்ந்ததைக் கண்டவுடனே, அந்தப் பிள்ளைகளெல்லாம் கைதட்டிக் கோவென்று ஆனந்தக் கூச்சலிட்டார்கள். அந்தக் கூச்சலைக்கேட்டு ஒரு சிறிய பெண் ஓடி வந்து அந்தக் குட்டியை மெல்ல எடுத்துக்கொண்டு போனாள். அன்று முதல் அச்சிறுமியினிடத்தில் நான் அதிகமான நன்றியோடிருக்கிறேன். நான் என் குச்சுவால் குழந்தைக்குத் தாயாயிருந்தும் என்னால் ஒன்றும் உதவி செய்யக்கூடாமல் போயிற்று.

அந்தப் பெண் உடனே என் குழந்தையை அண்டையிலிருந்த ஒரு வீட்டிற்குக் கொண்டுபோய் மெதுவான புற்கள் நிறையப்போட்ட ஒரு பெட்டியில் விட்டுக் காப்பாற்றப் பார்த்தாள். ஆயினும், ஐயோ! அந்தச் சிறு குழந்தையின்மேல் பட்ட காயம் மிகவும் கொடியதா யிருந்தமையால் மூன்று தினத்தில் அது உயிரை விட்டது; அந்தப் பெண் அதிகமான விசனமடைந்தவளாகி அதன் உடலைத் தன் தோட்டத்தில் ஓரிடத்திலே புதைத்துவிட்டாள். அதன் துக்கம் அவ்வளவோடு நீங்கிப் போயிற்று.

இனி நமக்கென்ன சுகமிருக்கிறதென்று நான் அதிகமான விசனத்துடனே என் வீட்டிற்குப் போனேன். போனவிடத்தில் எனக்கு உண்டான சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் நான் என்னென்று சொல்வேன். என் கூட்டினுள் நான் போய்ப் பார்த்தபோது, அங்கே என் பெரிய குழந்தை கண்ணன் சவக்கியமாக வந்து விளையாடிக்கொண்டிருந்தது.

அதைப் பார்த்தவுடனே நான் என் குழந்தையைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டு, 'என் செல்வமே! நீ எப்படி அந்தக் கூட்டைவிட்டு வெளிப்பட்டு இங்கு வந்து சேர்ந்தாய்?' என்று கேட்டேன். அதற்கு அந்தக் குட்டி ஸந்தோஷமாய்ச் சொன்ன மறுமொழியாவது: என்னைப் பிடித்துக் கொண்டு போய்ச் சிறையிலடைத்த பையனே என்னை வெளியே போக விட்டுவிட்டான். இன்றையதினம் காலையில் அவன் என்னை வந்து பார்த்து, 'கண்ணா! உங்களைப்போல மரத்தின்மேல் ஓட எனக்குத் தெரிந்திருந்தால், வண்டிகளி லேறிப்போவதுகூட எனக்கு அவ்வளவு பிரியமாயிராதென்று நான் நினைக்கிறேன். இந்தக் கூட்டிலுள்ள கம்பியின் மேல் நடந்து உன் காலெல்லாம் புண்ணாய்ப்போயிருக்குமென்று தோன்றுகிறது. இந்த நிர்ப்பந்தமான கூட்டில் அடைபட்டிருப்பதைப் பார்க்கிலும், என் வீட்டில் விநோதமாகத் திரிவது எனக்கு எப்படிச் சந்தோஷமா யிருக்குமோ, அப்படியே, உன் வீட்டில் யதேச்சையாக ஓடியாடுவதே உனக்குப் பிரியமாயிருக்குமென்பது நிச்சயம்; ஆகையால் என் அருமைத் தோழனே! நான் இதோ உன்னை வெளியே விட்டுவிடுகிறேன், இனிமேல் நீ உன் இனத்தோடு கூடிக் களிப்படைந்து வாழ்' என்று சொல்லி என்னை விட்டுவிட்டான்.

அப்புறம் யான் செய்யவேண்டுவதென்ன? ஒரே ஓட்டமாய் இவ்விடம் வந்து சேரமாட்டேனா! அப்பொழுது எனக்கு உண்டான சந்தோஷத்தில் என்னைச் சிறையிலிருந்து விட்டவனுக்கு வந்தனஞ் செலுத்தவும் மறந்தேன். கூட்டில் அடைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிலும் வெளியிலே விநோதமாய்த் திரிவதே எனக்கு மிகவும் பிரியமானதென்பதை அவன் இப்பொழுது தெரிந்துகொண்டான்—என்று மிகவும் சந்தோஷமாய் மறுமொழி சொல்லிற்று. அதைக்கேட்டு நான், எல்லாப் பிள்ளைகளும் இப்படியே தம்மைப்போலவே எளிய பிராணிகளையும் நினைத்து அன்பு பாராட்டும்படி பழக்கப்படுவார்களானால், கொடுமை என்பது உலகத்தை விட்டு ஒழிந்துபோகுமல்லவா என்று எண்ணிக் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு என் குட்டியுடனே சுகமாக வாழ்ந்து என் காலத்தைப் போக்கினேன்" என்று சொல்லிற்று.

ஐந்துக்களுக்குரிய சுதந்தரங்களைப்பற்றி.

பசு பக்ஷி முதலான வாயில்லாத எளிய ஜந்துக்குச் சுதந்தரமென்பது ஒன்று உண்டா என்று சற்று விசாரிப்போம். இந்தச் சுதந்தரம் மனிதர்களுக்கு உண்டாயிருக்குமானால், அவர்களைப்போலவே கடவுளது படைப்பான எளியபிராணிகளுக்கு மாத்திரம் என் இருக்கலாகாது? சுதந்தரமாவது

என்னவென்றால், பிறருடைய நிர்ப்பந்தத்திற்கு உட்படாமல் அவரவருக்கு இஷ்டமானபடி உயிர் வாழ்வதேயாம். தம் மனதிற்கு இஷ்டமானபடி வாழவேண்டுமென்கிற ஆசை உலகத்தி லொவ்வொருவருக்கு மிருப்பது இயற்கைதான். ஆனால் ஒவ்வொருவனும் தான் அப்படி வாழ விரும்பும்போது, தன்னைப்போலவே மற்றவர்களும் அவரவருடைய விருப்பத்திற்கு விரோதமில்லாமல் வாழ்வதை நன்குமதித்திருக்கவேண்டுவது கடமையாம்.

இதைப்பற்றி ஒரு பண்டிதர் சொல்லுவதாவது,— ‘ஒவ்வொரு மனிதனும் அவனவ னிஷ்டப்படி நடக்கச் சுவாதீனமுடையவனே; ஆனால் அப்படி அவன் தான் சுகமாக வாழ்வதன்பொருட்டுப் பிறருடைய சுவாதீனத்திற்கு விரோதம் செய்யலாகாது’ என்கிறார்.

இப்படிப்பட்ட சுதந்தரம் மனிதர்களுக்கு உண்டென்று சொன்னால், மனிதர்களைப்போலவே கடவுளால் படைக்கப்பட்ட பிராணிகளான பசு பக்ஷி முதலான எளிய ஜந்துக்களுச்குமாத்திரம் இது இல்லாமல் போகுமா? ஆதிகாலந் தொடங்கித் தத்துவவிசாரஞ் செய்த பெரியோர்கள், நம்மைப்போலவே எளிய ஜந்துக்களுக்கும் சுவதந்திரமுண்டென்றே யுறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

எல்லாப் பிராணிகளையும் தன்னைப்போலவே பார்க்கவேணுமென்றும், ஒரு ஜீவனையும் இம்சிக்கலாகாதென்றும் நம்முடைய வேதம் முறையிடுகிறது. அதன் கருத்தையே திருவள்ளுவநாயனார் தமது திருக்குறளில், ‘தன்னுடைய உடம்பு வளருவதற்கு மற்றொரு பிராணியின் மாமிசத்தைப் புசிப்பவனுக்கு அருள் எப்படி யுண்டாகும்?’ என்றும், ‘ஒரு பிராணியின் மாமிசத்தை யொருகால் புசித்தவருடைய மனமானது, ஆயுதத்தைக் கையிலே பிடித்தவருடைய மனம்போல, நன்மையை நினைக்காமல் எப்போதும் பாபத்தொழிலையே நினைக்கும்’ என்றும், ‘தின்பதற்கு மாமிசத்தை வாங்குகிறவர்கள் உலகத்திலில்லாவிட்டால் அதைக் கொன்று விற்பவரு மிருக்கமாட்டார்கள்’ என்றும், ‘மதிமயக்கமாகிய குற்றமில்லாத அறிவுடையோர் ஒரு பொழுதும் ஊனைத் தின்ன விரும்பார்கள்’ என்றும் பல விதமாக வெளியிட்டிருக்கிறார்.

‘கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்’

என்று, ஜீவஹிம்ஸை செய்யாதவனைத் தேவதைகளோடு ஒப்பாகவும் கூறியிருக்கிறார்.

பவுத்தர் முதலான பிறமதஸ்தர்களும், ஐரோப்பியர் முதலான பிறதேசத்தவர்களும் நெடுநாளைக்கு முன்னமே ஜீவகாருணியத்தின் பெருமையைக் கண்டறிந்து பலவிதமாகச் சிறப்பித்துக் கூறியிருப்பதோடு, வாயில்லா ஜந்துக்களை விசேஷமாக ஆதரித்து வந்தார்களென்றும் நன்றாக விளங்குகிறது. இந்துக்கள் தமது பசு முதலானவைகளை நாளைக்கும் ஒரு பெரிய தேவதை போலவன்றோ போற்றி வளர்க்கிறார்கள்.

பூர்வகாலத்து வழக்க மிப்படியிருக்க, ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே மிருகத்தன்மை யுடையவரான மனிதர்கள் சிலர் தோன்றிப் பயிரிட்டு ஜீவிக்க வழிதெரியாமல் கல்நெஞ்சினராய்க் காட்டு மிருகங்களையும், மனிதர்களையும் கொன்று வயிறு வளர்க்கத் தலைப்பட்டார்கள். அந்தக் கெட்ட வழக்கம் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பலவிடங்களிலும் பரவத் தலைப்பட்டு, யாரோ சில பேர் தவிர, இவ்வுலகத்திலுள்ள மற்றெல்லா மனிதர்களையும் மாமிசம் தின்பவர்களாக மாற்றி, எளிய ஜந்துக்களுடைய சுதந்தர மிப்படிப்பட்டதென்பதையும், அவற்றைப் படைத்த பேரருளாளனை கடவுளுடைய கருத்து இன்னதென்பதையும் கண்டறியும் திறமையில்லாத கபோதிக ளாக்கிவிட்டதைப் பார்க்க மிகப் பரிதாபமாயிருக்கிறது.

இப்படியிருக்க, இப்போ சிலகாலமாய்க் கல்விப் பயிற்சியும் நாகரிகத் தேர்ச்சியும் பல தேசங்களிலும் விருத்தியடையத் தலைப்பட்டபிறகு, ஜீவகாருணியமுள்ளவர்களான புலவர்கள் பலர் தோன்றி, எளிய ஜந்துக்களுடைய உரிமை யிப்படிப்பட்டதென்பதைக் கண்டறிந்து, அவைகளை ஆதரிப்பதே பெரிய தருமமென்பதைப் பலவிதமாகப் பிரசுரஞ் செய்யலானார்கள். ஆயினும் சென்ற பதினெட்டாவது நூற்றாண்டிலேதான் ஜீவகாருணியமென்பது மறுபடி வேரூன்றத் தலைப்பட்டது.

அப்பால் ஐரோப்பாவிலே இங்கிலாந்து முதலான தேசங்களில் ஜீவகாருணியமும் தரும சிந்தையு முடையவரான பலர் தோன்றி, மானிடர்களுடைய சுதந்தரமும், பசு பக்ஷி மிருகாதிகளான வாயில்லா ஜந்துக்களின் சுதந்தரமும் இப்படிப்பட்டவையென்று யாவருக்கும் நன்றாக விளங்கப் பற்பல ஸஞ்சிகைகளும் புஸ்தகங்களு மெழுதிப் பிரசுரஞ் செய்யத் தலைப்பட்டார்கள். இதற்குமுன் ஆயிரத்தி லொருவருக்குத் தெரிந்திருந்த அருமையான இவ்வுண்மை இப்பொழுது எங்கும் விசேஷமாகப் பரவ ஆரம்பித்திருக்கிறது. ஆகவே வெகு சீக்கிரமே, மனிதர்களுக்கு இருக்கிற சுவாதந்திரியம் வாயில்லாத எளிய ஜந்துக்களுக்கும் உண்டென்றும், நாம் நம்மைப்போலவே அவைகளையும் பாவித்து நடத்தவேண்டுமென்றும், அவற்றை அக்கிரமமாய் இம்சிப்பவர்கள் மேலுலகத்தில் தேவதண்டனைக்கு மாத்திரமேயன்றி, இவ்வுலகத்தில் ராஜதண்டனைக்கு உள்ளாவார்களென்றும் சட்டமுமேற்பட்டு, மனிதர்கள் யாவரும் தருமநெறி தவறாம லொழுகத் தலைப்பட்டுக் கடவுளுடைய கருணைக்குப் பாத்திரராகும் காலம் வந்துவிடுமென்று எதிர்பார்க்கிறோம்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1904.